
46-2

# The Three Women

## மூன்று பெண்கள்

## மாற்கு 16 : 1–8

இயேசுவினுடைய மூன்று பெண் தோழிகள் இயேசு அடக்கம் பண்ணப்பட்டதை கவனித்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். இயேசு வெள்ளிக் கிழமை மரித்தார். அடுத்த நாள் ஓய்வு நாளாயிருந்து (ஜனங்கள் ஆலயத்திற்கு போகின்ற நாள்) அந்த நாள் அவர்கள் முழு ஜீவியத்திலும் மிக துக்கமான பஸ்காவை அனுசரிக்கும் ஓய்வு நாளாயிருந்தது. அவர்கள் அழுதார்கள், ஒருவரோடு ஒருவர் மிகவும் அமைதியாக பேசிக் கொண்டார்கள்.

ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் எழுந்து சுகந்த வர்க்கமிடுவதற்கு உண்டான வாசனை திறவியங்களை வாங்கிக் கொண்டு போய் தங்கள் தலைவர் மேல் அவர்கள் வைத்திருக்கும் அன்பை காட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

கல்லரையின் வாசலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடு ஒருவர் சொல்லிக் கொண்டு நடந்தார்கள். அவர்கள் கல்லரையின் அருகே வந்து ஏரிட்டு பார்க்கிற போது அந்த கல் தள்ளப்பட்டிருக்க கண்டார்கள். அவர்கள் கல்லரைக்குள் பிரவேசித்து, வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு தூதனைப் பார்த்தார்கள்,

“எனக்குத் தெரியும், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த் தெழுந்தார்; அவர் இங்கே இல்லை; இதோ அவரை வைத்த இடம்; வந்து பாருங்கள் என்று சொன்னார்.”

“பிறகு நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்குப் போய் இயேசு உயிர்த் தெழுந்தார் என்று அவர்களுக்கு சொல்லுங்கள் என்றார்.

## ஜெபம்

“அன்பு ஆண்டவரே, நீர் மரித்தீர் அடக்கம் பண்ணப்பட்டீர், மறுபடியும் மரணத்திலிருந்து மூன்றும் நாள் உயிரோடே எழுந்தீர். நான் கண்டிப்பாக உம்முடைய பிள்ளையாக என்றென்றும் ஜீவிப்பதற்கு அருள் புரியும். நன்றி. ஆமென்.

## வளர்ந்த பிள்ளைகளுக்குறிய வேதாகம மனப்பாட பகுதி வசனம்.
## யோவான் 1 : 29

“இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற (இயேசு) தேவ ஆட்டுக்குட்டி,”